Tamilmanam – International Research Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 3049-0723
pISSN:3107-7781

தமிழ்மணம்
Peer-reviewed · Open access · Google Scholar · Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Monthly
10.63300/tm12052026.24 Vol. 12, No. 05 (2026) 12 05 2026 325–335 TIRJTS-2026-0001

RESEARCH ARTICLE

பக்தி இயக்கப் பரவலாக்கத்திற்கானச் சமூக மறுமலர்ச்சிச் சிந்தனைகளும் சமகால பொருத்தப்பாடும்

Social Renaissance Thoughts for the Spread of the Bhakti Movement and Their Contemporary Relevance

Harinitha S[1,*], Dr. L. Ramraj[2]
[1] Ph.D Research scholar (Full Time) PSG College of Arts & Science, Coimbatore – 641014
[2] Research Guide, Assistant Professor, Department of Tamil, PSG College of Arts & Science, Coimbatore – 641014
***Corresponding author:** Harinitha S, harinithasivasankaran@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 10 October 2026
Revised: 12 October 2026
Accepted: 15 October 2026

Article ID
TIRJTS-2026-0001

Peer review
Double-blind peer review

Keywords
Social Renaissance
Linguistic Hegemony
Spiritual Equality
Social Hierarchy
Religious Extremism
Social Dynamics

ABSTRACT

The Bhakti movement, which emerged and flourished in Tamil Nadu between the 6th and 9th centuries CE, was not merely a movement for religious expansion, but evolved into a catalyst for social renaissance. It presented counter-narratives to the hierarchical social structures—such as caste dominance, gender discrimination, and linguistic hegemony—that had frozen within the feudal social system. The foundational pillars that enabled the Bhakti movement to reach the masses were its devotional literary works. This research paper analyzes the social reform thoughts expressed through Tamil Bhakti literature, specifically the Panniru Tirumuraigal (Twelve Tirumurai volumes of Saivism) and the Nalayira Divya Prabandham (Four Thousand Divine Hymns of Vaishnavism). Furthermore, from a socio-historical perspective, it explores how these texts serve as a viable platform for discussing and addressing the social issues of the 21st century.

How to cite this article: Harinitha S, & Dr. L. Ramraj (2026). பக்தி இயக்கப் பரவலாக்கத்திற்கானச் சமூக மறுமலர்ச்சிச் சிந்தனைகளும் சமகால பொருத்தப்பாடும். *Tamilmanam – International Research Journal of Tamil Studies*, *12*(05), 325–335. https://doi.org/10.63300/tm12052026.24
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

பக்தி இயக்கப் பரவலாக்கத்திற்கானச் சமூக மறுமலர்ச்சிச் சிந்தனைகளும் சமகால பொருத்தப்பாடும்

'பக்தி இயக்கம் பிராமணீய மேலாதிக்கத்திற்கும் வருணாசிரம தர்மத்தின் பாகுபாடுகளுக்கும் எதிரான அடியார்களின் ஆன்மிகச் சமத்துவ எதிர்க்கதையாடலாகும்'

- *க. கைலாசபதி*

ஹரினிதா சி

முனைவர்பட்ட ஆய்வாளர் (முழு நேரம்),

பி எஸ் ஜி கலை அறிவியல் கல்லூரி, கோவை – 641014

முனைவர் லி. ராம்ராஜ்

நெறியாளர், உதவிப் பேராசிரியர்,

பி எஸ் ஜி கலை அறிவியல் கல்லூரி, கோவை – 641014

ஆய்வுச் சுருக்கம் (Abstract)

கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தில் தமிழ்நாட்டில் தோன்றி வளர்ந்துவரும் பக்தி இயக்கம், வெறும் சமயப் பரவலாக்கத்திற்கானதாக மட்டுமன்றி, சமூக மறுமலர்ச்சிக்கானதாகவும் உருவெடுத்துள்ளது. நிலமானியச் சமூகக் கட்டமைப்பில் உறைந்துபோயிருந்த சாதிய ஆதிக்கம், பாலினப் பாகுபாடு, மொழியியல் மேலாதிக்கம் போன்ற அடுக்கதிகார சமூக இருப்பிற்கு மாற்றான எதிர்க் கதையாடல்களை பக்தி இயக்கம் நிகழ்த்தியது. பக்தி இயக்கம் மக்களைச் சென்றடைய ஆதாரமாக இருந்தவை பக்தி இலக்கியங்கள். இவ்வாய்வுக் கட்டுரையானது, தமிழ் பக்தி இலக்கியங்களான பன்னிரு திருமுறைகள், நாலாயிர திவ்வியப்பிரபந்தம் ஆகியவற்றின் வழியே வெளிப்படும் சமூகச் சீர்திருத்தக் கருத்துகளை ஆய்வு செய்கிறது. மேலும், அவை 21-ஆம் நூற்றாண்டின் சமூகப் பிரச்சினைகளை விவாதிப்பதற்கானக் களமாக அமைவதையும் சமூகவியல் வரலாறு நோக்கில் ஆராய்கிறது.

திறவுச்சொற்கள்

சமூக மறுமலர்ச்சி (Social Renaissance), மொழியியல் மேலாதிக்கம் (Linguistic Hegemony), ஆன்மீகச் சமத்துவம் (Spiritual Equality), படிநிலைச் சமூகம் (Social Hierarchy), சமய தீவிரவாதம் (Religious Extremism), சமூக இயங்கியல் (Social Dynamics)

முன்னுரை

சமூக இயங்கியலில் 'நேர்×எதிர்' சமூக மாற்றத்தைத் தீர்மானிப்பவையாகின்றன. அடுத்த 'எதிர்' வரும்வரை அது நிலைக்கும். தமிழ்ச் சமூக இயங்கியலில் மாற்றங்களுக்கான/ சீர்திருத்தங்களுக்கான புதிய வருகைகளை 'எதிரா'கக் கொண்டு சிந்திப்பதற்கு இலக்கியங்கள் ஆதாரமாக இருக்கின்றன. சங்க இலக்கியங்கள் காட்டும் சமூக இயங்கியலில் 'போர்', 'வீரம்' ஆகியன முக்கியத்துவம் பெறும்பொழுது, சங்கம் மருவிய காலத்தில் 'அறம்' மையம் கொள்கிறது. சங்க இலக்கிய காலத்தில் அறம் போற்றப்பட்டிருந்தாலும், சங்கம் மருவிய காலத்தில் போரும் காதலும் மறைக்கப்பட்டு அறம் முன்னிறுத்தப்படுகிறது. எனவே, சங்கம் மருவிய கால அறம் என்பதனை சங்க காலத்தில் இருந்த பன்மீயத்திற்கு 'எதிரா'கக் கொள்ளமுடியும். சங்கம் மருவிய காலத்திய பண்பாட்டிற்கு எதிராக 'பக்தி மரபை'க் கொள்ள முடியும். பக்தி மரபிற்கு எதிராக ஐரோப்பியத்தைக் கொள்ள முடியும். இவ்வாறே அடுத்தடுத்த மாற்றங்களைக் கருத இடமுண்டு. ஒன்றின் சமூகவியல் கூறுகளை இன்னொன்று சீர்திருத்துவதாக கொள்ளலாம். அந்தச் சீர்திருத்தம், சமத்துவமானதாகவும் சில இடங்களில் தனக்குக் கீழ் கொண்டு வரும் கீழ்நிலையாக்கலையும் செய்யும். சான்றாக, காலனிய அதிகாரத்தைக் கூறலாம்.

பக்தி இயக்கம் தோன்றுவதற்கு முன்பிருந்த சூழலில், சமஸ்கிருத மயமாக்கம், கடுமையான சடங்குகளின் ஆதிக்கம் மற்றும் அரசதிகாரத்தைச் சார்ந்திருந்த இலக்கியப் போக்குகள் மேலோங்கியிருந்தன. ஆன்மீகமும் அதிகாரமும் குறிப்பிட்ட சில உயர்குடியினரின் உரிமையாகக் கருதப்பட்ட காலத்தில், பக்தி இயக்கம் ஆன்மீகத்தை சாமானிய மக்களுக்கானதாகப் பரப்ப முயன்றது. இறைவனை அடைய எவ்வித இடைத்தரகர்களோ, சடங்குகளோ, வர்ணாசிரமத் தகுதியோ தேவையில்லை. ஆழமான அன்பும் தொண்டுமே போதுமானது என்ற கோட்பாடு, அன்றைய நிலமானியச் சமூகத்தின் அடித்தளத்தையே அசைத்துப் பார்த்தது. தமிழில் பக்தி என்பது வெறும் தனிமனித வழிபாட்டு உணர்வாகவோ அல்லது ஆன்மீக அனுபவமாகவோ மட்டும் சுருங்கிவிடவில்லை. மாறாக, அது ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாகவும், மொழி உரிமையின் அடையாளமாகவும், பாலினச் சமத்துவத்திற்கானத் தேடலாகவும் விளங்கியது.

"பக்தி இலக்கியக் காலம் தமிழ்மொழிக்கும் இலக்கியத்திற்கும் புத்துயிர் அளித்த காலமாகும். அதுவரை மன்னர்களையும் வள்ளல்களையும் பாடிவந்த கவிஞர்கள், மக்களின் அன்றாட வாழ்க்கையையும், ஆன்மீக உணர்வுகளையும், எளிய தமிழிலேயே பாடிப் பரப்பினர்." (எம். ஆர். அடைக்கலசாமி, 2005, ப.122)

எனும் அடைக்கலசாமியின் கருத்துப்படி இலக்கியத்தின் மொழிச் சீர்திருத்தம் என்பதோடு மட்டுமன்றி பக்தி இலக்கியங்கள் வழிச் சமூகச் சீர்திருத்தங்களையும் முன்னெடுத்தது குறிப்பிடத்தக்கதாகும். அவ்வகையில், பக்தி இலக்கியங்கள் எவ்வாறு அன்றைய காலச் சமூக முரண்பாடுகளை எதிர்கொண்டன என்பதைக் கூறுவதாக இக்கட்டுரை அமைகிறது.

சமூகச் சீர்திருத்தத்திற்கு பக்தி இயக்கம் பின்பற்றிய வழிமுறைகள்

சமூகச் சீர்திருத்தம் என்பது,

- பண்பாட்டுத் தளத்தில் நிகழ்த்தப்படுதல்
- தனிமனித ஒழுக்கங்களைச் சீர்படுத்துதல்

என்கிற இரண்டு நிலைகளில் அமையும். இந்த இரண்டு நிலைகளிலும் வினையாற்றுவது பக்தி. பண்பாட்டுத்தளத்தில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்களை பக்தி இயக்கம் பின்வருமாறு அணுகியது.

	மேல் கீழ்	**பக்தி இயக்கம்**
படிநிலைச்சமூகம்	உயர்ந்த தாழ்ந்த (சாதி / சமூக அடுக்கு)	இறைக்கு முன் யாவும் சமம் (சமத்துவ முறை)
பாலினப்பாகுபாடு	ஆண் பெண் (பாலினப்பிரிவு / ஏற்றத்தாழ்வு)	பெண் = ஆண் (உயிரின் அடிப்படையில் சமம்)
மொழி	சமஸ்கிருதம் தமிழ் (மொழி அடுக்கு முறை)	தமிழ் = சமஸ்கிருதம் (மக்கள் மொழிக்குச் சம உரிமை)
வழிபாட்டு முறை	கட்டுப்பாடான வழிபாட்டுமுறை (நெகிழ்வற்ற சடங்குகள்)	வழிபாட்டுமுறையில் தளர்வு (எளிமையான / நெகிழ்வான வழிபாடு)

- **சமூகப் படிநிலைக்கான மாற்று** - பிறப்பின் அடிப்படையிலான படிநிலைகளை நிராகரித்து ஆன்மீகத் தளத்தில் அனைவரையும் ஒன்றிணைத்தல்.
- **தனிமனித மேம்பாட்டுக்கு மாறாக உள்ளத்துணர்ச்சி** - புறச்சடங்குகளை விடச் தூய்மையான உள்ளத்து உணர்ச்சிகளுக்கும் அன்பிற்கும் முதன்மை அளித்தல்.
- **சமூக அமைப்பிலிருந்து தப்பித்தல்** - விளிம்புநிலை மக்களையும் சமூகத்தின் முதன்மை ஆன்மீக நீரோட்டத்தில் சேர்த்தல்.

- **துறவு -** சமூக மேலாதிக்க அமைப்புகளிலிருந்து விடுபட்டு, மக்கள் தொண்டையே இறைத்தொண்டாகக் கொள்ளுதல்.
- பிராந்திய மொழிகளை வழிபாட்டிற்குரியதாக அங்கீகரித்தல்

மேற்சொல்லப்பட்ட பக்தி இலக்கியம் வழிச் செய்யப்பட்ட மாற்றங்களை முன்னிறுத்தியே இக்கட்டுரை அமைகிறது. இக்கட்டுரை தனிமனித ஒழுக்கங்களைச் சீர்படுத்திய வழிமுறைகள் குறித்தது அல்ல.

சாதியக் கட்டமைப்பிற்கு எதிரான புரட்சியும் சமத்துவமும்

பக்தி நெறி என்பது பெண்கள், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் விளிம்புநிலைச் சாதியினரையும் உள்ளடக்கிய ஓர் இயக்கமாகத் திகழ்ந்தது. எனில், பக்தி இயக்கம் சாதியமைப்பை எதிர்த்ததா? சாதியமைப்பை பக்தி இயக்கத்தின் அனைத்து நீரோட்டங்களும் முற்றாக நிராகரித்தன என்று சொல்ல முடியவில்லை. ஆனால், ஒடுக்கப்பட்டோரின் எதிர்ப்புக் குரல் அதன் ஆழத்தில் எப்போதும் ஒலித்துக் கொண்டுதான் இருந்தது. பல தாழ்த்தப்பட்ட சமூகங்கள் தங்களின் சமூக விழிப்புணர்வு இயக்கங்களை முன்னெடுத்துச் செல்வதற்குப் பக்தி இயக்கம் முன்னோடியாக இருந்தது. நாயன்மார்களும் ஆழ்வார்களும் அனைத்துச் சமூகப் பின்னணியிலிருந்தும் வந்தவர்களாவர். சான்றாக நந்தனார், கண்ணப்பர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருப்பாணாழ்வார் போன்றோரைக் கூறலாம்.

"திருமுறைகள் அனைத்தும் தமிழையும் சிவநெறியையும் ஒன்று சேர்த்து வளர்த்த அருணூல்கள். சாதி, குல வேறுபாடின்றி அடியார்கள் அனைவரும் இறைவனின் அருளுக்கு உரியவர்கள் என்பதைத் தேவாரப் பாடல்கள் தெளிவாக உணர்த்துகின்றன." *(கி. வா. ஜெகந்நாதன், 2001, ப.58)*

திருநாவுக்கரசர் (அப்பர்) பிறப்பின் அடிப்படையிலான சாதிய உயர்வைக் கடுமையாகச் சாடுகிறார். போலிச் சாத்திரப் பெருமைகளைப் பேசுவோருக்கு எச்சரிக்கை விடுக்கும் அவர், குலப் பெருமையைக் காட்டிலும் இறைத்தொண்டும் மெய்யன்புமே முதன்மையானது என்பதை வலியுறுத்துகிறார்.

"சாத்திரப் பேய்கள் கூப்பிடும் சாத்திரப் புளகனை விட்டுப்

ஆத்திரப் படாதே நெஞ்சே! ஆதி நாதனையே பாடு!"

திருநாவுக்கரசர் தேவாரம் (ஆறாம் திருமுறை, பாடல்: 6.98.1)

மேலும், பேரரசின் செல்வங்கள் அனைத்தும் ஒருவருக்குக் கிடைத்தாலும் அவர் இறைபக்தி இல்லாதவராயின் பயனில்லை. மாறாக, சமூகத்தால் தீண்டத்தகாதவராக ஒதுக்கப்பட்ட புலையராகவே இருப்பினும், அவர் சிவநெறி நின்று தொழும்

அடியாராயின் அவரே தாம் வணங்கத்தக்க தெய்வம் என்பதைப் பின்வருமாறு கூறுகிறார்.

“சங்க நிதி பதும நிதி இரண்டும் தந்து தரணியொடு வானாளத் தருவரேனும்...

அங்கம் எலாம் குறைந்தழுக தொழுநோயராய் ஆ உரித்துத் தின்று உழலும் புலையரேனும்...

அவரே நாம் தொழும் தெய்வமே”

திருநாவுக்கரசர் தேவாரம் (ஆறாம் திருமுறை, பாடல்: 6.95)

“சாதியப் படிநிலைகளில் ஒடுக்கப்பட்டிருந்த பாணர், வேடர், புலையர் போன்ற விளிம்புநிலை மக்கள் ஆன்மீகத் தளத்தில் 'அடியார்கள்' என்ற சமத்துவக் குடையின் கீழ் கொண்டுவரப்பட்டமையே பக்தி இயக்கத்தின் மிகப்பெரிய சமூகப் புரட்சியாகும்” (பேராசிரியர் க. கைலாசபதி, 2002, ப.40)

எனும் கைலாசபதியின் கூற்று நாவுக்கரசர் பாடல்வழிப் புலனாகிறது. நாயன்மார்களில், நாவுக்கரசர் உழவாரப் பணிசெய்து தன் இறையுணர்வை வெளிப்படுத்துகிறார். இவரின் செயல்பாட்டினை இரண்டு விதமான சீர்திருத்தக் கூறுகளாகக் கொள்ளமுடியும்.

- உழவாரப்பணி/தூய்மைப் பணி செய்யும் யாரொருவரும் இறையுணர்வுகொண்டு பக்தி நெறியில் இணையலாம்.
- இறைவழிபாட்டினைத் தமக்குப் பிடித்தமான முறையில் செய்து கொள்ளலாம்.

திருநாவுக்கரசர் பற்றிப் பேசும்பொழுது அவர் சமணத்தில் இருந்து சைவத்திற்கு வந்தவர் என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும். சமணத்தின் தாக்கம் சைவத்திற்கு வந்த பிறகும் வெளிப்படுகிறதோ என்ற ஐயமும் உண்டாகிறது. எனினும், அவரது இறை வழிபாட்டு முறையானது உழவாரப்பணி என்பதாக இருக்கிறது. இது அனைத்துச் சமூகத்தினரையும் இறையின்கீழ் ஒன்று எனச் சமப்படுத்துவதாகவும் உள்ளது.

பெண்ணிய விழிப்புணர்வும் ஆன்மீகச் சுதந்திரமும்

காரைக்கால் அம்மையாரும் ஆண்டாளும் தங்களது பாடல்கள் வழியாக, நிலப்பிரபுத்துவ ஆணாதிக்கச் சமூகம் பெண் உடல் மீது சுமத்தியிருந்த தளைகளிலிருந்து விடுதலையாகி சுயவிருப்பத்தை முன்னிலைப்படுத்தினர். குடும்பக் கட்டமைப்பிலிருந்து வெளியேறுதல் என்னும் தலைகீழ்களை நிகழ்த்தினர்.

“பிறந்து மொழிபயின்ற காலம்முத லாக

சிறந்தநின் சேவடியே சேர்ந்தேன் - நிறந்திகழும்

மைஞ்ஞன்ற கண்டத்து வானோர் பெருமானே

எஞ்ஞான்று தீர்ப்பது இடர்”

காரைக்கால் அம்மையார் அற்புதத் திருவந்தாதி (பாடல் 1)

ஆணாதிக்கச் சமூக அமைப்பில் பெண்களுக்கு மறுக்கப்பட்ட ஆன்மீக மற்றும் வெளிப்பாட்டுச் சுதந்திரத்தைப் பக்தி இயக்கம் உடைத்தெறிந்தது. சமூகத்தால் பெண்களுக்கு விதிக்கப்பட்ட “அழகு” மற்றும் “குடும்பக் கட்டமைப்பு” என்ற சங்கிலிகளை உடைத்து, பேய் வடிவம் வேண்டிப் பெற்றவர் காரைக்கால் அம்மையார்.

"மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்"

ஆண்டாள் நாச்சியார் திருமொழி (முதல் திருமொழி, பாடல் 4)

ஆண்டாள், மானுட ஆண்களை மணக்க மறுத்து, தன் காதலையும் விருப்பத்தையும் வெளிப்படையாகப் பாடியவர். ஆணாதிக்கச் சமூக எல்லைகளைத் தன் பாடல்கள் மூலம் தாண்டினார்

மொழியியல் சீர்திருத்தமும் எளிய மக்கள் ஆன்மீகமும்

சமஸ்கிருத மொழி மட்டுமே இறை வழிபாட்டிற்குரியது எனும் 'மொழியியல் மேலாதிக்கத்தை' பக்தி இலக்கியங்கள் முற்றாகத் தகர்த்தன. வேதங்களுக்கும் ஆகமங்களுக்குள்ளும் முடங்கிக் கிடந்த ஆன்மீகத் தத்துவங்களை, எளிய தமிழில் பண் இசையோடு பாடி மக்களிடம் கொண்டு சேர்த்தது பக்தி இயக்கம்.

சமஸ்கிருதத்திற்கு இணையான புனிதத் தன்மையைத் தமிழுக்கு அளிக்கும் பொருட்டு திருமுறைகள் ‘தமிழ் மறை’ என்றும், திவ்வியப்பிரபந்தம் ‘திராவிட வேதம்’ என்றும் அழைக்கப்பட்டன. ஏட்டுக்கல்வி மறுக்கப்பட்ட பாமர மக்களுக்குப் பண் இசையும் வாய்மொழி மரபும் (Oral Tradition) ஆன்மீக விழிப்புணர்வை ஊட்டின. திருமூலர், தத்துவங்களைச் சாமானியனும் புரியும் எளிய தமிழில் வெளிப்படுத்தினார்:

“ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்

நன்றே நினைமின் நமனில்லை நாணாமே”

- *திருமூலர், திருமந்திரம் (பாடல் 2104)*

சித்தர்கள் மேலும் ஒரு படி சென்று, போலியான சடங்குகளையும் மொழியியல் போலித்தனங்களையும் கடுமையாக விமர்சித்தனர்.

தற்காலச் சூழலில் பக்தி இலக்கியத்தின் பயன்பாடும் பொருத்தப்பாடும்

21-ஆம் நூற்றாண்டுச் சமூகம் எதிர்கொள்ளும் பல உளவியல் மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்கு பக்தி இலக்கியங்கள் தெளிவான தீர்வை முன்வைக்கின்றன. இன்றையச் சூழலில் சாதியவாதமும் சமய தீவிரவாதமும் தலைதூக்கும் வேளையில்,

திருமூலரின் “ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்” மற்றும் “யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை” என்ற சிந்தனை சகிப்புத்தன்மையையும் சகோதரத்துவத்தையும் வளர்க்கிறது. நவீன வாழ்க்கை முறையில் மனிதனை வாட்டும் பயம், கவலை, மன அழுத்தத்திற்கு அப்பரின் வரிகள் மிகப்பெரிய உளவியல் பலத்தைத் தருகின்றன.

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்

நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்"

திருநாவுக்கரசர் தேவாரம் (மறுமாற்றத் திருத்தாண்டகம், பாடல் 1)

அரச அதிகாரத்திற்கும் மரண பயத்திற்கும் அஞ்சாத மன உறுதி, தனிமனிதனுக்குத் தற்காலத்திலும் தன்னம்பிக்கையை அளிக்கிறது. இயற்கையை இறைவனின் வடிவமாகப் பார்த்தல் பக்தி இலக்கியத்தின் சிறப்பாகும். மரங்கள், ஆறுகள், மலைகளைத் தெய்வமாகப் போற்றியதன் மூலம் சூழலியல் சமநிலையைப் பேண வலியுறுத்தினர்.

"பூதங்கள் ஐந்தாகிப் புலனாகிப் பொருளாகி"

மாணிக்கவாசகர் திருவாசகம் (திருஅண்டப்பகுதி)

மாணிக்கவாசகர் அகிலத்தின் தோற்றத்தை இயற்கையோடு இணைத்துப் பாடுகிறார். சமூகப் பாகுபாடுகளைக் கடந்து மனிதநேயத்தையும், மரண பயத்தைப் போக்கி மன உறுதியையும் வளர்ப்பதே பக்தி இலக்கியங்களின் உண்மையான நோக்கமாகும். இயற்கையைப் பேணும் சூழலியல் சிந்தனையையும், மன அழுத்தத்தைத் தீர்க்கும் உளவியல் தெளிவையும் இவை ஒருசேர வழங்குகின்றன. நவீனத் தொழில்நுட்ப உலகில் தொலைந்துபோகும் மனித மனங்களுக்கு அமைதியும் வழிகாட்டுதலும் தரும் வாழ்வியல் வழிகாட்டியாக பக்தி இலக்கியம் திகழ்கிறது. எனவே, 21-ஆம் நூற்றாண்டின் சமூக அமைதிக்கும் தனிமனித விழிப்புணர்விற்கும் இவ்வரிகளின் பொருத்தப்பாடு எக்காலத்திற்கும் இன்றியமையாதது.

பக்தி இயக்கத்தின் உள்ளார்ந்த முரண்பாடுகளும் தற்கால நீட்சியும்

பக்தி இயக்கம் சாதி, பாலின வேறுபாடுகளைக் கடந்து 'அனைவரும் சமம்' என்ற ஆன்மீகச் சமத்துவத்தை முன்வைத்து, ஒடுக்கப்பட்டோருக்கும் பெண்களுக்கும் தன்மானத்திற்கான மாற்றுப் பெருவெளியை உருவாக்கிய போதிலும், சமூகத்தின் அடித்தள சாதியக் கட்டமைப்பைத் தகர்க்கத் தவறியது. இதற்கு இயக்கத்திற்குள் நிலவிய உட்கிடக்கையான முரண்பாடுகளும், மக்கள் பின்பற்றிய ‘இரட்டைத் தள இயக்கமுமே’ (Dual-plane operation) முதன்மைக் காரணங்களாகும். ஒருபுறம் திருநாவுக்கரசர்“**சாத்திரம் பலபேசும் சழக்கர்காள் கோத்திரமும் குலமும் கொண்டு**

என் செய்வீர்?" ***திருநாவுக்கரசர் தேவாரம் (ஐந்தாம் திருமுறை, பாடல்:*** *5.173.3*) எனக் குலப் பெருமைகளைச் சாடி, உழவாரப் பணி மூலம் எளிய மக்களின் உழைப்பை உயர்த்தியபோதிலும், மறுபுறம் திருஞானசம்பந்தர் **'கவுனியர் கோன்காண் ஞானசம்பந்தன்'**எனத் தனது கோத்திரப் பெருமையைப் பதிவுசெய்து, 'புனிதம் - தீட்டு' கோட்பாடுகளை முன்வைத்தார். ஆன்மீகக் குழுக்களில் பல்வேறு சாதியினர் இணைந்த போதிலும், அவர்கள் வழிபாட்டுத் தளத்தில் பொதுவான ஆன்மீக நெறிகளையும், உணவருந்துதல் மற்றும் திருமணம் போன்ற சமூகத் தளத்தில் தங்களின் சாதிய விதிகளையும் ஒரே நேரத்தில் பின்பற்றினர். ஆன்மீகச் சமத்துவத்தை ஏற்றுக்கொண்டு சாதியமைப்பைக் கேள்வி கேட்காத இந்த நெகிழ்வுப்போக்கு, சாதியக் கொடூரங்களைக் குறைக்க இயலாத ஒரு 'பாதுகாப்பு கவசமாக' செயல்பட்டு, சாதி அமைப்பு சேதமின்றித் தொடரவே வழிவகுத்தது. டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் பக்தி இயக்கப் புனிதர்களையும் (Saints) சாதியமைப்பையும் பற்றித் தமது புகழ்பெற்ற 'சாதி ஒழிப்பு' (Annihilation of Caste - 1936) என்ற நூலின் பகுதி 24 (Section 24) -இல் பின்வருமாறு கூறுகிறார்.

"The Sants have never carried on a campaign against Caste and Untouchability. They were themselves affected by the ideas of Caste and Untouchability and were in fact the victims of it. It is true that the Sants have preached the equality of men before God. But that is not preaching equality of man to man."

- Dr. B.R. Ambedkar, Annihilation of Caste (Section 24)

பக்தி இயக்கச் சான்றோர்கள் சாதியமைப்பின் பலியாடுகளாகவே இருந்தனரே தவிர அதற்கு எதிராகப் போராடவில்லை; 'கடவுளின் முன் அனைவரும் சமம்' என்ற அவர்களின் குரல் ஆன்மீகச் சமத்துவமே அன்றி சமூகச் சமத்துவம் அன்று என்பதாக அம்பேத்கர் அவரது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சாதியத் தூய்மையையும் ஆணாதிக்கத்தையும் பாதுகாக்கும் முதன்மை நிறுவனங்களான அரசு, கோயில் மையப் பொருளாதாரம் மற்றும் குடும்பம் ஆகிய அமைப்புகளோடு பக்தி இயக்கம் காட்டிய போக்கு, அதன் சீர்திருத்தக் கூறுகளை நீர்த்துப்போகச் செய்தது. இதனை, தொ.பரமசிவன் கூறுவதாவது,

"அதிகாரத்தின் பெருவடிவமாக அரசும் குறு வடிவமாகக் குடும்பமும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதிகாரம் முழுமையாக ஆணின் கையில் ஒப்படைக்கப்பட்டது என்பதே பக்தி இயக்கத்தின் வெற்றியாகும்". (தொ பரமசிவன், 2022, ப.23)

சாதி எதிர்ப்பைப் பேசித் தோற்றுவிக்கப்பட்ட தீவிர ஆன்மீக இயக்கங்கள் கூட, சமூக எதிர்ப்பைச் சமாளிக்கத் தங்களை மூடிய அமைப்புகளாக மாற்றிக்கொண்டு, காலப்போக்கில் 'தானே ஒரு புதிய சாதியாக' (Sect to Caste) உருவெடுத்தன. சுருங்கக் கூறின், பக்தி இயக்கத்தால் சாதியமைப்பை முற்றிலுமாகத் தகர்க்க முடியாவிட்டாலும், அது எளிய மக்களுக்கு ஒரு 'மாற்று ஆன்மீகப் பெருவெளியை'

வழங்கியது. ஆன்மீகத் தளத்தில் சமத்துவம் பேசிவிட்டு, நடைமுறை வாழ்வில் 'திருமணம்' எனும் குடும்ப அமைப்பிற்குள் பெண்ணடிமைத்தனத்தையும் சாதியத் தூய்மையையும் ஏற்றுக்கொண்ட இம்முரண்பாடே, இன்றளவும் பொதுவெளியில் 'சமத்துவ அரசியலையும்' தனிப்பட்ட குடும்ப வாழ்வில் 'சாதிய அகமணமுறையையும்' (Endogamy) ஒரே நேரத்தில் பின்பற்றும் நவீன சமூகத்தின் கவலைக்குரிய யதார்த்தத்திலும் நீடிக்கிறது.

முடிவுரை

பக்தி இலக்கியத்தைப் பாடிய புலவர்களே பக்தி இயக்கத்திற்கான அடிப்படைகளை உருவாக்கியவர்கள். பக்தி இலக்கியப் புலவர்கள் சமூகச் செயல்பாட்டாளர்களாக (Social Activities) இயங்கியவர்கள். அவர்களைத் தொடர்ந்தே பிற சமூக சேவை அமைப்புகள் பிற்காலத்தில் உருவாகின. அவர்கள் சமயப் பூசல்களில் விளைந்த நன்மை இறைவனுக்கு முன் அனைவரும் சமம் என்னும் சீர்திருத்தமாகும். அதன் விளைவுகளான சாதீய இறுக்கத் தளர்வு, பெண் விடுதலைக்கானத் தொடக்கம், மொழித்தூய்மைக்கு மாற்று ஆகியவற்றைச் சீர்திருத்தமாகவே கொள்ள வேண்டும். சமூகப்படிநிலைக் கட்டமைப்பை விட்டு வெளியேறும் வாசலை பக்தி இயக்கம் உருவாக்கியது.

இவ்வகையில், பக்தி இயக்கம் தமிழ் மொழி வளர்ச்சிக்கும், கலைப் பண்பாட்டு மீட்சிக்கும், குறிப்பிட்ட அளவிலான சமூகச் சீர்திருத்தத்திற்கும் ஆற்றிய பங்களிப்பு மறுக்க முடியாதது. எனினும், அது ஆன்மீகத் தளத்தில் வழங்கிய சமத்துவத்தை, சமூகக் கட்டமைப்பிலோ அல்லது குடும்ப நிறுவனத்திலோ முழுமையாகச் செயல்படுத்தத் தவறிவிட்டது. அப்பர் போன்ற தீவிரச் சீர்திருத்தவாதிகளின் குரல்கள் இருந்தபோதிலும், சம்பந்தர் போன்றோரின் மரபுவழி வைதிக நெறிகளே பிற்கால நிறுவனமயப்பட்ட சமய அமைப்புகளில் மேலோங்கின. பொதுவெளியில் சமத்துவம் பேசி, குடும்ப அமைப்பிற்குள் சாதியத்தையும் பெண்ணடிமைத்தனத்தையும் புனிதம் - தீட்டு எனும் பெயரில் தக்கவைக்கும் நடைமுறை இன்றளவும் தொடர்வதற்கு, பக்தி இயக்கத்தின் உள்ளே தீர்க்கப்படாமல் விடப்பட்ட இந்த முரண்பாடுகளே வரலாற்றுச் சான்றுகளாக நிற்கின்றன. நவீன சமத்துவச் சமூகத்தைக் கட்டமைக்க, ஆன்மீக மற்றும் பண்பாட்டு மறுமலர்ச்சிகளின் இத்தகைய உள்ளார்ந்த முரண்பாடுகளை விமர்சனப்பூர்வமாக அணுகுவது இன்றியமையாததாகும்.

துணைநூற்பட்டியல் (References)

References

அடைக்கலசாமி, எம். ஆர்., (2005), தமிழ் இலக்கிய வரலாறு, முல்லை நிலைய வெளியீடு, சென்னை

ஆண்டாள், (2018), நாச்சியார் திருமொழி (உரையுடன்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை

கைலாசபதி, க, (2002), தமிழ் நாவல் இலக்கியம் & பக்தி இயக்கமும் சமூகமும், குமரன் புத்தக இல்லம், சென்னை

சேக்கிழார், (2010), பெரியபுராணம், (ஸ்ரீ இராமகிருஷ்ண மடம் பதிப்பு), ஸ்ரீ இராமகிருஷ்ண மடம், சென்னை

திருமூலர், (2012), திருமந்திரம் மூலமும் உரையும், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை

பரமசிவன் தொ. (2022), சமயங்களின் அரசியல்,வானவில் புத்தகாலயம், சென்னை

ராஜதுரை எஸ். வி. (2026), வரலாறும் நிகழ்கால அக்கறைகளும் (தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகள்), ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், சென்னை

ஜெகந்நாதன், கி. வா. (2001), பன்னிரு திருமுறை வரலாறு, அமுது நிலையம், சென்னை

Ambedkar, B. R., (1936), Annihilation of Caste (Section 24)